நாள்.10.03.2025

**அசல் வழக்கு எண். 39/2016**

**பெயர்.பாலசுப்பிரமணியன்**

**த.பெ. ராமசந்திரன்**

**பி.வா.சா.2– வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் அன்னதானத்திற்கு பணத்தை வசூலிப்பதற்கு என்ன பெயர் என்றால் அன்னதான அன்பளிப்பு. நான் அன்னதான அன்பளிப்பை வாங்கும்போது கோவில் பெயர் போட்ட பத்திரிக்கை, சுவாமி படம் போட்டு பத்திரிக்கை விநியோகம் செய்கிறோம் அதற்கு யார் அனுமதி கொடுத்தது என்றால் அனுமதி யாரும் தரவில்லை. மனிதாபிமானத்தில் செய்கிறோம். EOவிடம் அனுமதி பெற்றுள்ளோம். அதற்கு ஆவணங்களை ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஒவ்வொரு வருடமும் அன்னதானம் முடிந்த பிறகு மீதமுள்ள தொகையை கோவிலுக்கு செலுத்த கடமைபட்டவர்கள் என்றால் இல்லை. மீதி தொகையை வங்கி கணக்கிலோ, என் கையிருப்பில் வைத்து கொண்டதற்கோ ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அன்னதான அன்பளிப்பு வாங்குவதற்கு 5ம் பிரதிவாதி எப்போதுமே ஒப்புக்கொண்டதில்லை என்றால் எனக்கு தெரியாது. EOமட்டும் தான் கோவிலை நிர்வகிக்கிறார் என்று நினைத்து அவரிடம் மட்டும் அனுமதி வாங்கி நான் அன்னதானம் செய்கிறேன் என்றால் சரிதான். இரண்டு பரம்பரை டிரஸ்டி அனுமதித்தால்தான் எந்த ஒரு விசயத்தையும் EO முழுவதுமாக செயல்படுத்த முடியும். அது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் 2015 ல் தற்காலிக கொட்டகை அமைப்பதற்காக ரூ.2,60,945/– கொடுத்தார்கள் என்றால் தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன்.வாதியின் வழக்குரை பக்கம் 5ல் "*அன்னதாக கொட்டகை அமைப்பதற்காக 2015 ம் ஆண்டில் ரூ.2,60,945/– கோவில் நிர்வாகத்தால் செலவிடப்பட்டுள்ளது* " , *அதே பக்கத்தில் "2014 ம் ஆண்டு அன்னதானம் வசூல் செலவில் பாக்கி தொகை ரூ.3,82,487/–*" என்று காட்டப்பட்டுள்ளது என்றால் இருந்திருக்கலாம். "*2014 ல் அன்னதான கொட்டகை அமைக்க கோவில் மூலம் செலவான தொகை ரூ.2,05,508/–* "என்று காட்டப்பட்டுள்ளது அதே போல் *"2014 ம் ஆண்டு அன்னதானம் வசூல் செலவில் பாக்கி தொகை ரூ.4,43,646/–*"எனது கையிருப்பில் இருந்ததாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். 2013 ல் அன்னதாக கொட்டகை அமைக்க கோவில் நிர்வாகம் செலவிட்ட தொகை ரூ.176164/– அதே ஆண்டு அன்னதான செலவு போக எனது

கையிருப்பில் மீதம் இருந்த தொகை ரூ.4,13,258.76/– என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2012 ல் அன்னதாக கொட்டகை அமைக்க கோவில் நிர்வாகம் செலவிட்ட தொகை ரூ.169007/– அதே ஆண்டு அன்னதான செலவு போக எனது கையிருப்பில் மீதம் இருந்த தொகை ரூ.379600/– என்று காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையில் ஆட்சேபனை இருப்பதாக எனது வாக்மூலத்திலோ, எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மீதமுள்ள தொகைக்கு வரவு செலவு கணக்கு விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு ஆண்டும் மீதமுள்ள தொகையை கொண்டு அன்னதான கொட்டகையை என்னால் அமைக்க முடியும் என்றால் இல்லை. என்ன காரணம் என்றால் அந்த பணத்தை கொண்டுதான் மீண்டும் அட்வாண்ஸ் தொகை அன்னதானத்திற்கு கொடுக்க முடியும். ஒவ்வொரு வருடமும் விஷேச நாளுக்கு எத்தனை மாதம் முன்பாக வசூல் செய்வேன் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பு. ஒரு வாரத்திற்கு முன்பு வசூல் ஆகும் தொகையை வைத்து அட்வாண்ஸ் கொடுக்க முடியும் நான் என் சுய லாபத்திற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. எனது கையிருப்பிலேயே மீதம் உள்ள தொகை இலட்சகணக்கில் உள்ளதால் கோவில் செலவில் பந்தல் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பொதுவாக கோவிலுக்கு எந்த ஒரு காணிக்கை பொருள் கொடுத்தாலும் பக்தர் தன்னுடைய சொந்த செலவில்தான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். விஷேசத்தில் எத்தனைபேர் அன்னதானம் சாப்பிடுவார்கள் என்றால் 30,000 பேருக்கு மேல். அன்னதானத்தில் மட்டும் கோவில் நிர்வாகம் செலவு செய்ய வேண்டும் என்று ஏன் நினைக்கிறேன் என்றால் கோவிலில் தரிசனம் செய்ய மக்கள் வருவதால் அவர்களுக்கு கொட்டகை அமைக்கிறார்கள் அந்த கொட்டகையில் அன்னதானம் செய்கிறேன். கோவிலில் பக்தர்கள் தங்கி தரிசனம் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றால் இரவு நேர தரிசனம் என்பதால் 12.00 மணிக்கு மேல் தான் தரிசனம் என்பதால் தங்குவார்கள். பக்தர்கள் தங்கி தரிசனம் பெறுவதற்கு கோவில் மகாமண்டபம் உள்ளது என்றால் சரிதான். கார்த்திகை மாதம் என்பதால் மழை வர வாய்ப்புள்ளதால் கொட்டகை அமைப்பார்கள். நான் சொல்லும் அன்னதான கொட்டகை கோவிலிலிருந்து எத்தனை மீட்டர் தள்ளி உள்ளது என்றால் ஒரு 200 அடி. வழக்கு தாக்கல் செய்த பிறகும் அன்னதானம் செய்து வருகிறேன் என்றால் ஆமாம்.வழக்கு தாக்கல் செய்த பிறகும் வரவு செலவு கணக்குகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இதுவரை பந்தல் அமைக்க வேறு

உபயதாரர்கள் உள்ளார்களா என்று விசாரித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வருடமும், போன வருடமும் தகர கொட்டகை பந்தல் அமைத்து கொடுத்தது வடுவூர் PGR&Co உரிமையாளர் தான் என்றால் இல்லை. வேறு யார் அமைத்து கொடுத்தது என்றால் நாங்கள் தான் அமைத்துக்கொண்டோம். இந்த வருடம் முதல் மற்றும் இரண்டாவது வாரம் அன்னதான பொறுப்பை பரக்கல கோட்டை கிராம மக்கள் எடுத்துகொண்டார்கள் என்றால் தெரியாது. 3வது வாரம் லாரல் பள்ளி தாளாலர் பாலசுப்பிரமணியன் பொறுப்பெடுத்துக்கொண்டார் என்றால் தெரியாது. அந்த 3 வாரமும் அவர்கள் வெளியில் வசூலிக்கவில்லை என்றால் தெரியாது. 4வது வாரம் நான் மட்டும்தான் வசூல்செய்து தகர பந்தலில் வைத்து அன்னதாகம் செய்தோம் என்றால் சரிதான். 3 வாரமும் அன்னதானம் செய்தவர்கள் புகைப்படம், பிரசாதம் எதுவும் விநியோகம் செய்யவில்லை என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் கார்த்திகை சோமாவார திருவிழா அழைப்பிதழ் 2017 ம் ஆண்டு பத்திரிக்கை அட்டையில் உள்ள கைபேசி எண்.8939589888 என்று அச்சிடப்பட்டுள்ளது என்னுடையது என்றால் சரிதான். அன்னதாக தொடர்புக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கைபேசி நம்பரை குறிப்பிட யார் எனக்கு அதிகாரம் கொடுத்தது என்றால் யாரும் கொடுக்கவில்லை நானேதான் போட்டுக்கொண்டேன். அந்த திருவிழா அழைப்பிதழ் **வா.சா.ஆ.18** ஆக குறியிடப்படுகிறது. பெரிய அளவில் அன்னதானம் செய்வதற்கு மாவட்ட ஆட்சியர், உணவு பாதுகாப்பு அலுவலர் ஆகியோரிடம் எழுத்து மூலம் அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பக்கம் 3–ல் "திருக்கோவில் மூலம் அன்னதாகொட்டகை நிறுவ தீர்மானம் செய்யஇயலாது மேலும் அவ்வாறு தனிப்பட்டவர்களுக்கு திருக்கோவில் மூலம் செய்ய அவசியம் இல்லை அவர்களே அன்னதான கொட்டகை போட்டுக்கொள்ள வேண்டும் இல்லை எனில் அவர்கள் வசூலித்த தொகையை திருக்கோவில் வசம் ஒப்படைத்தால் திருக்கோவில் மூலம் கொட்டகை அமைக்க தீர்மானம் கொடுக்கலாம்" என்று பரம்பரை அறங்காவலர் 4ம் பிரதிவாதி சடகோப ராமானுஜம் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் ஆமாம். அதனுடைய மறு பக்கத்தில் EO கையெழுத்து போட்டுள்ளார் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அன்னதானத்திற்கு வசூல் செய்த வரவு செலவு புத்தகம் என்றால் சரிதான். அது 2011 ஆண்டிற்கு உரியது என்றால சரிதான். அதில் பக்கம் 30 ல் "2011 ம் ஆண்டு பொங்கல் அன்று அன்னதானம் வழங்கிய செலவு"என்று உள்ளது என்றால் ஆமாம். எவ்வளவு செலவு செய்துள்ளோம் என்றால் ரூ.47,027/–. இதேபோல்

ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் அன்னதானத்திற்கு வரவு செலவு கணக்கு காட்டியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்கண்ட விவரத்தை எனது வாக்குமூலத்திலோ, பதில் உரையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அதே பக்கம் 30ல் "பாக்கி தொகை கார்த்திகை கடைசி சோமாவார அன்னதாக கமிட்டி மூலமாக பட்டுவாடா செய்யப்பட்டது " என்று உள்ளது. அந்த அன்னதாக கமிட்டியில் யார் யார் உள்ளார்கள் என்றால் அன்னதான கமிட்டி என்ற அமைப்பே இல்லை. எவ்வளவு பணம் யார் யாரிடம் பட்டுவாடா செய்யப்பட்டது என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.